**16.03.2026**

**அ.வ.எண். 48/2022**

**பி.சா.1 – திரு. ஏழுமலை த/பெ. ராஜு**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 16.03.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என்னுடைய கிரய ஆவணத்தின் விவரங்களை நான் எதிர் வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 03.12.2003 தேதியில் P.V. வாசன் என்பவரிடம் இருந்து கிரய ஆவணம் எண். 4969/2003 அன்று நான், பட்டணம் கிராமம் , க.ச.எண்.63/1 ல் சயிட் எண்.63 ல் தென்புற பகுதியை கிரயம் பெற்றேன் என்றால் ஆமாம். அதில், வழித்தடம் குறித்து தற்போது மனையிட எண்.63 ல் விடப்பட்டுள்ள 6 அடி அகல தென்வடல் தடத்தில் (6 X 30) 180 சதுரடியில் சரிபாதி 90 ம் சேர்த்து மொத்தம் 1005 சதுரடிகள் அல்லது செண்ட் 2.134 சதுரடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **03.12.2003 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள கிரய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. வாதியும், மேற்படி 180 சதுரடி தென்வடல் தடத்தில் வடபுறம் சரிபாதி 90 சதுரடி தடத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். எனது கிரய பத்திரத்தில் உள்ள அளவை விட கூடுதலாக நான் 1 அங்குலம் கூட உரிமை கோர முடியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வாதி மற்றும் எனது சொத்தை அளவீடு செய்ய வந்தனர். அப்போது நான் உடன் இருந்தேன். இருவர் சொத்தையும் என் முன்னிலையில் அளந்தனர் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தென்வடல் லேயவுட் ரோட்டை தென்வடலாக 0.1 அங்குலம், 0.2 அங்குலம், 0.3 அங்குலம்ஆக்கிரமிப்பு செய்து மொத்தம் 3.1 அங்குலம், 3.2 அங்குலம், 3.3 அங்குலம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது, நான் என்னுடைய 3 அடி அளவுப்பாதையை அனுபவம் செய்கிறேன்.

3. வாதி கிரயம் பெறுவதற்கு முன்னதாகவே, நான் கிரயம் பெற்று வாதி நிலத்தில் மேற்கண்ட அளவில் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் இல்லை.

நீதிமன்ற ஆணையர் அறிக்கை சரியாக இருந்ததால் தான் நான் மறு அளவீடு செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி கோரியபடி நான் ஆக்கிரமிப்பை சட்டப்படி அகற்ற கடைமைப்பட்டவர் என்றால் சரியல்ல. வாதிக்கு கிரயம் கொடுத்த நரசிம்மனும், பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த வாசுவும், சரியான அளவுகள் குறிப்பிட்டு கிரயம் செய்து கொடுத்துள்ளனர் என்றும், எனவே அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur